# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
# Tamilnadu Government Employees' Association

(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச்செய்தி எண் 01/2018 நாள் 05.01.2018

மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச்செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும் ஊடகச் செய்தி

**போராடும் போக்குவரத்து தொழிலாளர் போராட்டம்**
**மறுக்கப்படும் உரிமைகளும்! தடுக்கப்படும் போராட்டங்களும்!!**
**போக்குவரத்து தொழிலாளர் போராட்டத்திற்கு அரசு ஊழியர் சங்கம் ஆதரவு**

போக்குவரத்து தொழிலாளர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை சம்பள உயர்வு, பேச்சுவார்த்தை மூலம் ஒப்பந்தம் செய்யப்பட்டு ஊதிய உயர்வு வழங்கப்படுவது வழக்கமான ஒன்று. அதன்படி 1.9.2016ம் தேதியிலிருந்து அமலாக வேண்டிய 13வது ஊதிய ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தையை அரசு நடத்த முன்வராததால் போக்குவரத்து தொழிற்சங்கங்கள் நேற்று மாலை (04.01.2018) முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

போக்குவரத்து தொழிலாளர்களின் போராட்டம் நியாயமானது. அதை காலவரையற்ற வேலைநிறுத்தம் வரை கொண்டுசென்றுவிட்டதற்கு அரசு, அமைச்சர் மற்றும் அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மைதான் காரணமே தவிர போக்குவரத்து தொழிலாளர்கள் அல்ல. 1.9.2016 முதல் பெறவேண்டிய ஊதிய உயர்வுக்காக அவர்கள் ஓராண்டிற்கு மேலாக பொறுமையுடன் காத்திருப்பதையும், ஒருவருட காலத்திற்கு மேலாக போக்குவரத்துத் துறையில் ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு ஓய்வூதியமும் ஓய்வூதியப்பலன்களும் கொடுக்கப்படாத நிலையிலும் மக்கள் அசௌகரியத்தை கருத்தில் கொண்டு அவர்கள் போராட்டத்தில் குதிக்காமல் பொறுமை காத்து வந்திருக்கிறார்கள் என்பதையும், அரசின் அலட்சியத்தால், அமைச்சரின் பொறுப்பற்ற தன்மையால், நியாயமாக வழங்க வேண்டிய ஊதியத்தை வழங்க மறுக்கும் உழைப்பாளி விரோத போக்கால், வேறுவழியின்றி அவர்கள் காலவரையற்ற போராட்டத்திற்கு உந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் பொது மக்களும் அரசு ஊழியர்களும் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

போக்குவரத்து தொழிலாளர்கள் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.7000 கோடியை அரசு எவ்வித அறிவிப்புமின்றி செலவு செய்துவிட்டு துறை நஷ்டத்தில் இயங்குவதாக கூறியிருப்பது நயவஞ்சகச் செயலாகும். நட்டத்திற்கு தொழிலாளர்கள் காரணமில்லாத நிலையில் அவர்களின் பணத்தை, ஓய்வூதியத்தை, ஓய்வூதியப் பலன்களை நிறுத்தி வைக்கும் அரசின் போக்கானது இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி சட்ட விரோதமானதாகும். நட்டத்தை ஏற்படுத்தியவர்கள் மீது நடவடிக்கையோ, நட்டத்தை சரிசெய்வதற்கான திட்டமோ இல்லாமல் தொடர்ந்து போக்குவரத்துத்துறை நட்டத்தில் இயங்கும் போக்கு அரசு, போக்குவரத்துத்துறையை நட்டக்கணக்கு மீட்டு விடாது.

அதே போல, போக்குவரத்து ஊழியர்களுக்கு நியாயமாக வழங்கவேண்டிய ஊதியமாற்றத்தை வெட்டிச்சுருக்கி அரசின் கஜானாவை நிரப்பிட முயலுகிறோம் என்ற போலிவாதத்தை முன்னிறுத்தியும் அரசின் துறைகள் / போக்குவரத்து கழகங்களில் நடைபெறும் பெரும் ஊழல்களாலும் நிர்வாக சீர்கேடுகளாலும் போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்டுள்ள நட்டங்களுக்கு அதன் தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கும் போக்குகளையும் தமிழகத்தின் அனைத்து தரப்பு உழைப்பாளி மக்களும் புரிந்தே வைத்திருக்கிறார்கள்.

**எதிர்தரப்பினரின் கருத்தைக் கேட்காமலேயே தடை**

போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராடினால் மக்கள் பாதிக்கப்படுவார்கள், அரசு ஊழியர்கள் போராடினால் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள், தொழிலாளர்கள் வேலை நிறுத்தத் செய்தால் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள், விவசாயிகள் போராடினால் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று போராட்டங்களுக்குத் தடைவிதிக்கும் நீதிமன்றங்களுக்கு, போராடுபவர்கள் எல்லாம் மக்களாகத் தெரியவில்லை. இந்த நீதிமன்றங்கள் மக்கள் நலனுக்காக இல்லாமல் அரசாங்கத்தின் ஊழியர் விரோதப் போக்கிற்கு அரணாக இருக்கின்றனவோ என்ற ஐயப்பாடுகள் அவைகள் போராடும் தொழிலாளர்களின் தரப்பை கேட்மாலேயே தடைகள் விதிக்கும்போதும் உத்தரவுகள் போடும்போதும் ஏற்படத்தான் செய்கின்றன. ஜாக்டோ-ஜியோ போராட்டத்தின்போது, உயர்நீதிமன்ற உத்தரவில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பிரச்னை என்ன? அவர்கள் எதற்காக போராடுகிறார்கள்? அவர்கள் போராட்டத்திற்கு அடிப்படை ஆதாரம் உள்ளதா இல்லையா? அவர்கள் எவ்வளவு காலமாக போராடுகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் ஒரு வார்த்தைகூட இல்லாமலே தடைவிதிக்கப்பட்டது. சாலையின் இடதுபக்கம் போக வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விதி. ஒருவன் சாலையின் வலப்புறம் போய்விட்டான் என ஒரு காவல்துறை அதிகாரி வழக்கு பதிவு செய்தால், அவன் ஏன் வலதுபுறமாகப் போனான் என்று விசாரிக்காமல், அவன் வலதுபுறம் போனது சட்டவிதிகளை மீறியதாகும் என நீதிமன்றம் அவனுக்கு அபராதம் விதித்தால் எப்படியிருக்குமோ அப்படி உள்ளன நீதிமன்ற சமீபகால உத்தரவுகள். சாலையின் இடதுபுறத்தில் போக்குவரத்திற்கு இடையூறாக ஒரு பெரிய லாரியை நிறுத்தி வைத்துவிட்டு போலீஸ்காரர் சோதனை செய்துகொண்டிருந்தால் வாகன ஓட்டிகள் அசௌகரியத்துடன் சாலையின் வலப்புறமாக போகாமல் என்ன செய்ய முடியும்? அதுபோன்றதொரு உத்தரவுதான் உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளும்.

**எந்திரத் தனமான உத்தரவுகள்**

தப்பு செய்தவன் புத்திசாலி அதை தட்டிக் கேட்டவன் குற்றவாளி என்ற நிலையில் தற்போது போக்குவரத்து தொழிலாளர்கள் நடத்தி வரும் நியாயமான போராட்டத்தை கருத்தில் கொள்ளாமலேயே, அவர்கள் தரப்பை கேட்காமலேயே உயர்நீதிமன்றம் இப்படிப்பட்ட உத்தரவுகளை பிறப்பிக்கலாமா என்று மக்கள் மன்றத்தில் விவாதங்கள் எழுந்துள்ளன. கடந்த ஆண்டும் இதேபோல மதுரை நீதிமன்றத்தில்தான் போக்குவரத்து தொழிலாளர்கள் போராடுவது சட்டவிரோதம் என்றும் அவர்கள் வேலைக்கு திரும்பாவிட்டால் டெஸ்மா எஸ்மா சட்டங்கள் பாயும் என தீர்ப்புரைத்த நீதிபதிகளைக் கண்டோம். அதன்பிறகு மாயாண்டி என்ற ஓய்வுபெற்ற போக்குவரத்து ஊழியர் ஆறாண்டுகாலமாக ஓய்வூதியப்பலன்களைப் பெறாமல் அவதியுறுவது குறித்து தபால்கார்டில் நீதிபதிக்கு கடிதம் எழுதி, இப்படி உங்களில் ஒரு நீதிபதிக்கு ஆறாண்டு காலம் ஓய்வூதியம் வராமல் இருந்தால் நீங்கள் போராடாமல் இருப்பீர்களா? என கேள்வி எழுப்பிய பின்னர் தற்போது அது வழக்காக மாற்றப்பட்டு நீதிமன்றம் அரசை, போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஓய்வூதிய நிலுவை, ஊதிய உயர்வு பற்றி அவர்களுடன் பேசச்சொல்லி பணித்து வருகிறது. இன்றுவரை அரசு நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றவில்லை என்பதும் வெள்ளிடைமலை.

**அரசுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள்**

தன் துறையில் தனக்கு ஏற்பட்ட பதவி பறிப்புக்காகவோ, வழங்கப்படாத பதவி உயர்வுக்காகவோ ஒரு ஊழியர் அரசுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் வாயிலாக போராட்டம் நடத்தி நீதிமன்றம் அவர்களில் பலபேருக்கு பணியும், பதவி உயர்வும் வழங்க உத்தரவிட்ட பின்னரும் அரசாங்கம் அந்த உத்தரவுகளை மதிக்காமல் கிடப்பில் போட்டு, சம்பந்தப்பட்ட ஊழியர்கள் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்து அது வாய்தாவுக்கு வரும் தேதியில் நீதிமன்றத்தின் உத்தரவுகளை அரசாங்கம் நிறைவேற்றுவதைக் கண்டிருக்கிறோம். இதுபோன்ற, அரசுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் ஆயிரக்கணக்கில் சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. ஆக அரசாங்கமே நீதிமன்றத்தின்

உத்தரவுகளை மதிப்பதில்லை என்பதற்கு ஆதாரங்களை வேறெங்கும் தேடிச்செல்லத் தேவையில்லை. அதேபோல உச்சநீதிமன்றம் கர்நாடக அரசுக்கு காவிரி நீரை தமிழகத்திற்கு திறந்துவிடச் சொல்லி மூன்றுமுறை உத்தரவிட்டும் கர்நாடக அரசு அந்த உத்தரவை மதிக்கவில்லை. அதேபோல நீட் தேர்வுக்கு எதிராக தமிழகத்தில் நடைபெறும் போராட்டங்கள் அமைதியான முறையில் யாருக்கும் தொந்தரவில்லாமல் நடத்தப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டதை சென்னையில் உள்ள ஒரு பள்ளியின் மாணவிகள் பொருட்டாக கருதாமல் சாலைமறியல் செய்து சில மணி நேரம் போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்தார்கள்.
இந்த நீதிமன்றத் தீர்ப்புகளும் அதன் விளைவுகளும் சொல்வதென்ன? இந்திய ஜனநாயகத்தில் கடைசி நம்பிக்கையாக மக்கள் நேசித்த நீதிமன்றங்கள் மக்களை விட்டு வெகுதூரம் சென்றுகொண்டிருக்கின்றன என்பதைத்தான். டாஸ்மாக் கடைகளை மூட உத்தரவிட வேண்டும் என்று மக்கள் போராடினால், நீதிமன்றம் போனால், "அது அரசின் கொள்கை முடிவு அதில் நீதிமன்றம் தலையிட முடியாது." என்று மக்களுக்கு எதிராக உத்தரவு சொல்லும் நீதிமன்றம்தான், தலைக்கவசமில்லாமல் வாகனம் ஓட்டிச் செல்லும் இரண்டு சக்கர வாகன ஓட்டிகள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அரசிடம் கேட்கிறது. இப்படி மக்களுக்கு அசௌகரியம் எதுவோ அதை மட்டுமே செய்யும் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளை மக்கள் அதிர்ச்சியுடனும் அச்சத்துடனும் பார்க்கிறார்கள்.

**தனக்கு நீதி தரணிக்கு அநீதி**

1.1.2016ஆம் தேதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய ஊதிய மாற்றத்தின் அடிப்படையில் மத்திய அரசு ஊழியர்கள் ஊதிய மாற்றமும், நிலுவையும் பெற்று விட்டார்கள். அதே மத்தியத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ். அதிகாரிகளும்கூட ஊதிய மாற்றமும் நிலுவைத் தொகையும் பெற்றுவிட்டனர். இதில் உச்சநீதிமன்ற உயர்நீதிமன்ற நீதியரசர்களும் விதிவிலக்கல்ல, 1,1,2016 முதல் உச்சநீதிமன்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கான ஊதிய மாற்றமும் அமல்படுத்தப்பட்டு, நிலுவைத் தொகையும் அரசினால் வழங்கப்பட்டுள்ளது, மக்களுக்காக சேவை செய்வதாக கூறிக்கொள்ளும் முதல்வர் அமைச்சர்கள் உள்ளிட்ட எம்.எல்.ஏ.க்களும்கூட தங்களுக்கான சம்பள உயர்வை கொடி பிடிக்காமல், கோஷம் போடமல், கமிட்டி அமைக்காமல், அறிக்கை கேட்காமல், 100 சதவீதத்திற்கு மேல் தாங்களே உயர்த்திக் கொண்டுள்ள நிலையில், போக்குவரத்து தொழிலாளர்கள் தங்களுக்கான ஊதிய மாற்றத்திற்காக போராடினால், ஆட்சியாளர்களும் நீதிமன்றங்களும், நடத்தை விதி மீறல் என்கிறார்கள், போராடத் தடை என்கிறார்கள், குறிப்பாணை கொடுக்கிறார்கள் இவற்றை எல்லாம் நீதிமன்றத்தின் மூலம் நியாயப்படுத்துகிறார்கள்.

**நீதிமான்கள் வழி சொல்ல வேண்டும்**

வரலாறுகள் மாறுவதாக கூறப்பட்டாலும் உண்மை நிலை அதுவல்ல. வரலாறுகள் மாற்றியமைக்கப் படுகின்றன. ஒவ்வொரு போராட்டமும் ஒவ்வொரு யுத்தி. ஒவ்வொரு போராட்டமும் ஒரு அனுபவம். போராடுவது அடிப்படை உரிமையல்ல என்ற ஒரு சிறிய வட்டத்தோடு மட்டும் நீதிமன்றங்களும் நீதிபதிகளும் நின்றுவிடுவது நியாயங்களுக்கும் தர்மங்களுக்கும் அவர்கள் இழைக்கும் அநீதி. போராடுவது அடிப்படை உரிமையல்ல என்று கூறுபவர்கள் மறுக்கப்பட்டும் தொழிலாளிகளின் உரிமைகளை அவர்கள் எப்படிப் பெற வேண்டும் என்பதையும் கூற வேண்டும். அவர்களை போராடவிட்டது யார் தவறு? அது அரசாங்கத்தின் அல்லது எஜமானர்களின் தவறாகும். உரிமைகளை தர மறுக்கும் இவர்ளை யார் கேட்பது? போராடுவது அடிப்படை உரிமையல்ல என பேசும் நீதிமன்றங்கள் கூடவே இதற்கான வழியையும் கூற வேண்டும். அதுவும் ஒப்புக்கொண்ட உரிமையை கொடுக்க மறுக்கும் அரசாங்கத்தை எதிர்த்து போராட வேண்டுமா? போர் தொடுக்க வேண்டுமா என்பதையும் இந்த நீதிமான்கள் தெரிவிக்க வேண்டும்.

அரசாங்கம் என்ன செய்தது? போக்குவரத்து தொழிலாளர்கள் என்ன செய்தார்கள்? என்பதை சம்பந்தப்பட்ட தரப்பினரை விசாரித்து அறியாமலேயே போராட்டத்துக்கு தடை விதிப்பது, கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும், பணியைவிட்டு செல் என்றெல்லாம் உரைப்பது நியாயமானதாக இல்லை. அதுதான் இந்தப் போராட்டத்தில் நடந்தது கொண்டிருக்கிறது. சட்டங்கள் அதிகாரங்களால் உருவாக்கப்படலாம், செயல்படுத்தப்படலாம் ஆனால் நியாயங்களால் அவை மீறப்படும் என்பதையும் பெரும்பான்மைகளின் முன் அதிகாரங்கள் மண்டியிட்டே ஆகவேண்டும் என்பதையும் இப்போராட்டம் இவ்வுலகிற்கு உணர்த்திக்கொண்டிருக்கிறது.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


இந்நிலையில், தொழிற்தகராறு சட்டங்களின்படி கூட்டுபேர உரிமை பெற்ற தொழிலாளர்கள் வேலையளிப்பவரின் (அரசின்) சகலவிதமான ஒடுக்குமுறை ஆயுதங்களுக்கு எதிராகவும் தம்மிடம் உள்ள கடைசி ஆயுதமாக வேலைநிறுத்தம் ஒன்றினையே பெற்றிருக்கிறார்கள் என்ற நிலையிலும் வன்முறையற்ற அறவழியில் போரட அரசமைப்புச்சட்டம் வழங்கியுள்ள உரிமையினை பயன்படுத்துகிறபோது, நியாயமான போராட்டத்தை பாதுகாக்கவும் உரிமைகளை அரசு பறித்துள்ளபோது அரசினை கண்டிக்கவும் தண்டிக்கவும் வேண்டிய நீதிமன்றம் சமீபகாலமாக போராட்டங்களுக்கு எதிரான நிலையில் கடுமையாக ஒடுக்க முனைவதும் ஜனநாயக அமைப்பு முறையினை சீர்குலைத்து குடிமைச்சமூகத்தில் பதற்றத்தை அதிகரிக்கவே செய்யும் என்பதையும் சுட்டிக்காட்ட விழைகிறோம்.

எனவே, இப்பிரச்சனையில் தமிழக முதல்வரே நேரடியாக தலையிட்டு, போக்குவரத்து தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை சுமூகமாக பேசித் தீர்க்கவும், தகுந்த உத்தரவுகள் பிறப்பித்தும், விழாக்காலமான ஜனவரி மாதத்தில் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியத்தை தவிர்க்க வேண்டும் என்றும், போக்குவரத்துத் துறையில் பணியிலிருந்து ஓய்வு பெற்று ஓராண்டிற்கு மேலாக தாமதப்படுத்தப்பட்டுள்ள நியாயமான ஊதியமாற்றத்தினை ஏற்படுத்திடவும் ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பலன்கள் பெறாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் இதர பலன்களை உடனடியாக வழங்கியும் இது செயல்படும் அரசாங்கம் என நிரூபித்து பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

போக்குவரத்து தொழிலாளர்களின் போராட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஆதரவு தெரிவிப்பதோடு, போராட்டம் தொடர்ந்தால் அரசு ஊழியர்களும் போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கைகள் வெல்ல போராட்ட களம் புகுவர் என்பதையும் இந்த அரசுக்கு தெரிவித்துக் கொள்கிறது.

**(மு.அன்பரசு)**
பொதுச்செயலாளர்